விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 048 வள்ளுவர் ஆண்டு 2057 தை 22 வியாழக்கிழமை (05.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




- தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து -

# கிளிநொச்சி, மட்டக்களப்பில் பேரெழுச்சியுடன் கரிநாள் போராட்டம்

## உணர்வுபூர்வமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் திரள்வு

தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி, மட்டக்களப்பில் பேரெழுச்சியுடன் கரிநாள் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றனர். (15ஆம் பக்கம் பார்க்க)

# இனவாதத்துக்கு நாட்டில் இடமில்லை

## சுதந்திர தின உரையில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

நாட்டில் எந்தவொரு இனவாதத்துக்கும் இடமளிக்கப்போவதில்லை. தேசிய ஒற்றுமையே எமது இலக்கு என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



# யாழ்ப்பாணம் பல்கலையில் ஏற்றப்பட்ட கறுப்புக்கொடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கரி நாள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று 02ஆம் பக்கம் பார்க்க



# இலங்கையில் புனித தாதுக்கள்



15ஆம் பக்கம் பார்க்க

## சுதந்திர தினத்தை முன்னிட்டு

# வவுனியாவில் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறாக்கள்



16ஆம் பக்கம் பார்க்க

# கற்கோவளத்தில் வாள்வெட்டு

## குடும்பஸ்தர் படுகாயம்

(கரணவாய்)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இடம்பெற்றவாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்டத்தில்

# நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## வைத்திய நிபுணர் அரவிந்தன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நீரிழிவுத் தாக்கம் அதிகரித்துச் செல்வதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் மகாலிங்கம் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இத 15ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளிநொச்சி, மட்டக்களப்பில் நடைபெற்ற கரிநாள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பிரித்தானியாவில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் நேற்று ஈழத்தமிழர்கள் கவனயீரப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## இனவாதத்துக்கு...

78ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று (04) காலை ஜனாதிபதி தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எமது அகராதியில் இருக்கும் மிகவும் அசிங்கமான இரு வசனங்கள் எவை? இனவாதம் மற்றும் மதவாதம்தான் அவை. அதனால் இனவாதம் மற்றும் மதவாதத்தினால் எம்வசமுள்ள பலங்களை நாம் சுயமாக அழிப்பதும் பல வீனப்படுத்துவதும்தான் நடக்கிறது என நம்புகிறோம்.

அதனால் எமது நாட்டில் எந்தவித பிரிவினைக்கும் இனவாதத்திற்கும் இடமளிக்க மாட்டோம் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம். எமது நாட்டில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான பிரதான பலத்தை கட்டியெழுப்புவோம் என்பதை எமது நாட்டு மக்களுக்கு அறிவிக்கிறோம் என்றார்.(ம-7)

## யாழ்ப்...

கறுப்புக்கொடி ஏற்றப்பட்டு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினமான நேற்று தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் நீண்ட கால கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. (ம-7)


யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
(தேசிய பாடசாலை) பருத்தித்துறை

**பாடசாலை சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு விடல்**

யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை சிற்றுண்டிச் சாலையினை 2026 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன. இது தொடர்பான விலைமனுப் படிவம் மற்றும் மேலதிக தகவல்களை பாடசாலை அலுவலகத்தில் (அலுவலக நேரத்தில்) பெற்றுக் கொள்ளலாம்.

- விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 17.02.2026
- விலை மனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் : 18.02.2026 பி.ப 2.00 மணி

அதிபர்
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
(C-4944)

**மலிவு விலையில்**

**பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள்**




மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு
**076 315 6470**
ஸ்ரீமுருகன் No,303, K.K.S Road, Jaffna.
(C-4941)

**மணமகன் தேவை**

1990 இல் பிறந்த அவிட்ட நட்சத்திரத்துடன் கூடிய மணப்பெண்ணிற்கு மணமகன் தேவை.
எதிர்பார்ப்பு :- வெளிநாடு, உத்தியோகம்.
**075 392 1524**
**076 655 9480**
(2022)

**வேலையாட்கள் தேவை**

K.K.S றோட்டில் அமைந்துள்ள பிரபல Printing நிறுவனம் ஒன்றிற்கு கீழே உள்ள தகைமை உடையவர்கள் தேவை.

● Graphic Design ● CoralDraw & Photoshop ● Indesign

தெரிந்தவர்கள், அனுபவம் உள்ளவர்கள், வைண்டிங் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.

- ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**021 223 1644, 077 833 8625, 077 774 6855**
(6743)

**வேலையாட்கள் தேவை**

K.K.S றோட் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சில்வர் கடை ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவை. வயது (18-30). அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பெண் வேலையாள் பில் எழுத கூடியவராக இருத்தல் வேண்டும். காசாளராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

சமுகமளிக்கும் போது NIC, G.S Character கொண்டு வருதல் வேண்டும்.

**தொடர்பு: 077 811 8948**
(C-4948)


## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 02 - 1949 | 04 - 02 - 2026 |



## தங்கராசா புனிதவதி

நெல்லியடி மகா வித்தியாலய வீதி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா புனிதவதி அவர்கள் நேற்று (04.02.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா - பாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான த.பாக்கியலட்சுமி, த.மங்கையற்கரசி மற்றும் த.சுந்தரபாரதி (ஓய்வு நிலை நிர்வாக கிராம அலுவலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சு.சிவமலர் (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நெல்லியடி மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.
077 437 4211
077 652 4982
தகவல்: குடும்பத்தினர்
(C-4946)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27-05-1943 இறப்பு 17-01-2025


### அமரர் கணபதி கந்தையா

திதி : அபரபட்ஷம் சதுர்த்தி (05.02.2026)

நீங்காத நினைவுகளால்
நீர்மல்கும் கண்களுடன்
மகன்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உலகோர் ஏங்காத நாளில்லை
ஏன்பறந்தீர் எம்மைவிட்டு
ஆண்டு ஒன்று போனாலும்
இவ்வுலகில் நாம்வாழும் வரை
உங்கள் நினைவுகள் நீங்காமல்
நிலைத்திருக்கும்.

செம்பியன்பற்று தெற்கு, தாளையடி.
தகவல் குடும்பத்தினர்
(2023)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27.07.1956 மறைவு 03:02:2026

எமது பிரதேச செயலகத்தில் நிர்வாகக் கிளையின் கலாசார உத்தியோகத்தரும் ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவருமான **திரு.சிவயோகநாதன் முகுந்தன்** அவர்களுடைய அன்புத் தந்தையார்

### அமரர் சீவரத்தினம் சிவயோகநாதன்

அவர்கள் 03.02.2026 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயர் பகிர்வில்... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.
(C-4943)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கையின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரிநாள்












கிளிநொச்சி







மட்டக்களப்பு









(படங்கள் :- தேவானந்தன், சப்தசங்கரி)

## இலங்கையுடனான உறவை வலுப்படுத்த அமெரிக்கா உறுதி



(கொழும்பு)

பொருளாதார உறவுகள் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்தவும், பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை ஊக்குவிக்கவும், இரு நாட்டு மக்களின் விருப்பங்களுக்கு ஆதரவளிக்கவும் இலங்கையுடனான தனது ஒத்துழைப்பைத் தொடருவதாக அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

இலங்கையின் 78ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு அந்நாட்டு மக்களுக்கு அமெரிக்க அரசாங்கம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளது.

பரஸ்பர மரியாதை மற்றும் சுதந்திரமான, பாதுகாப்பான மற்றும் வளமான இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் சார்பில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ விடுத்துள்ள அதிகாரப்பூர்வ செய்தியில், தற்போதைய அமெரிக்க நிர்வாகத்தின் கீழ் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை புதிய உச்சத்தை எட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஙி)

## 'GovPay' செயலி மூலம் 46,000இற்கும் மேற்பட்ட அபராதங்கள்

(கொழும்பு)

போக்குவரத்து விதிமீறல்களுக்கான அபராதங்களை செலுத்த அறிமுகப்படுத்தப்பட்ட 'GovPay' பயன்பாட்டைப் பயன்படுத்தி 2025 ஆம் ஆண்டில் 46,000இற்கும் மேற்பட்ட வாகன சாரதிகள் தண்டப்பணம் செலுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


அதன்படி, மொத்தம் 46,635 வாகன சாரதிகள் 'Gov Pay' செயலி மூலம் அபராதம் செலுத்தியுள்ளனர்.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் ஜனவரி 24 வரை போக்குவரத்து விதிமீறல்களைச் செய்த 11,715 சாரதிகள் 'Gov Pay' செயலியைப் பயன்படுத்தி அபராதம் செலுத்தினர்.

அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பிரிவினால் அதிக அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஙி)

## வாக்காளர் பட்டியலில் பெயர்களை உறுதிப்படுத்துங்கள்

### பவ்ரல் அமைப்பு கோரிக்கை




(கொழும்பு)

2026 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் பதிவு செய்யும் பணிகள் கடந்த பெப்ரவரி 1ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ள நிலையில், தகுதியுள்ள அனைத்துப் பிரஜைகளும் தமது பெயர்கள் உள் வாங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துமாறு பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் 2027 ஜனவரி 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 18 வயது பூர்த்தியடையும் இளம் பிரஜைகள், தத்தமது பிரதேச கிராம அலுவலர் மூலம் YC படிவத்தைச் சமர்ப்பித்துத் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி,

"தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பது அவசியமானது. இது ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை உரிமை மாத்திரமன்றி, ஒரு சிவில் கடமையுமாகும். எனவே, பொது மக்கள் இது குறித்துத் தமது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# இலங்கையுடனான ரி-20 தொடரை முழுமையாக கைப்பற்றியது இங்கிலாந்து

**இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை முழுமையாக கைப் பற்றியுள்ளது.**



கண்டி பல்லேகலை விளையாட்டரங்கில் இடம்பெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சி யில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணியின் சார்பில் சேம் கரன் 58 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணியின் சார்பில் துஷ்மந்த சமீர 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்தநிலையில் 129 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி யைத் தழுவியது.

இதற்கமைய 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரை 3-0 என்ற அடிப்படையில் இங்கிலா ந்து அணி முழுமையாக கைப் பற் றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

### பாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டி

# நடேஸ்வரா கல்லூரி அணி சம்பியன்



இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டத் சங்கத்தினால் நடத்தப்படும் 25 பந்துப் பரிமாற்றம் கொண்ட பெண்களுக்கான கடினப்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அணி யாழ் மாவட்ட அணியை 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றுள்ளது.

வேலணை மத்திய கல்லூரி மைதா னத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நடேஸ்வரா கல்லூரி அணி 25 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கட்டுகளை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நடேஸ்வராக் கல்லூரி அணி சார்பில் சிவசுப்பிரமணியம் மதுவந்தி 20 ஓட் டங்களை அதிக பட்சமாக பெற்றார். பந்து வீச்சில் யாழ் மாவட்ட அணி சார் பில் கிரு. 3 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ் மாவட்ட அணியானது 13.2 பந்துப்பரி மாற் றங்களில் கடுமையான போரா ட்டத்தை வெளிப் படுத்தி 62 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமி ழந்தது. யாழ் மாவட்ட அணி சார்பில் மலீனா 24 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றார். நடேஸ்வரா கல்லூரி வீராங்கனை சத்தியசீலன் வைஷ்ணவி 4.1 ஓவர் பந்து வீசி 21 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தி வெற்றிக்கு வழிவகுத்தார்.

இதையடுத்து 35 ஓட்டங்களினால் நடேஸ்வராக் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

வடமாகாணத்தில் ஐந்து பாடசா லைகளுக்கிடையில் நடத்திய நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்று நடேஸ் வராக் கல்லூரி அணி முதலாம் இடத்தைப்பிடித்துள்ளது. (3-60)

# உலககிண்ண ரி-20 தொடரில் இந்தியா வரலாறு படைக்கும்

### எம்.எஸ் தோனி நம்பிக்கை

எதிர்வரும் ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் பலம் குறித்து முன்னாள் அணித் தலைவர் எம்.எஸ்.தோனி தனது கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

இதன்படி ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணி புதிய வரலாறு படைக்கும் என எம்.எஸ்.தோனி தெரிவித்துள்ளார்.

இதுவரை இருந்த அணிகளிலேயே மிகவும் ஆபத்தான அணிகளில் ஒன்றாக தற்போதைய ரி-20 உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணி திகழ்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சூர்யகுமார் யாதவ் தலைமையிலான தற்போதைய இந்திய அணியின் திறமை குறி த்து அவர் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

தோனியின் இந்த கருத்து ரசிகர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் பைகள் விற்பனையால்

# அதிக இலாபமீட்டும் நிறுவனங்கள்

(கொழும்பு)

**பொருட் கொள்வனவின் போது விநியோகிக்கப்படும் பொலித்தீன் பைகளுக்கு நுகர்வோரிடமிருந்து அறவிடப்படும் பணத்தால், நிறுவனங்கள் அதிக இலாபத்தை ஈட்டுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**



சுற்றுச்சூழல் நீதிக்கான மத்திய நிலையத்தின் தலைவர் ஹேமந்த விதானகே இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

முன்னதாக பொருட் கொள்வனவின் போது பொலித்தீன் பைகளை இலவசமாக வழங்கிய நிறுவனங்கள், தற்போது அதற்காக நுகர்வோரிடமிருந்து பணத்தை அறவிடுகின்றன.

இதன்மூலம், ஒரு நாளைக்கு சுமார் 50 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகையை நிறுவனங்கள் இலாபமாக ஈட்டுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொலித்தீன் பைகளுக்கு அறவிடப்படும் பணம் அரசாங்க வரியாக சேகரிக்கப்பட்டு, கழிவு முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## பிரான்ஸ் தேடிய இலங்கையர் பிரித்தானியாவில் சிக்கினார்

(கொழும்பு)

ஆட்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 7 பேர் பிரித்தானியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தேடப்பட்டு வந்த இலங்கையர் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இலங்கையர், சிறுமி ஒருவரை வன்கொடுமைக்கு உட்படுத்திய குற்றத்திற்காக பிரான்ஸ் அதிகாரிகளால் தேடப்பட்டு வந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல் செயற்பாடுகளை இலக்காகக்கொண்டு இன்டர்போலினால் முன்னெடுக்கப்பட்ட மிகப்பெரிய நடவடிக்கையின் போது குறித்த ஏழு பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஏழு பேரையும் நாடு கடத்துவதற்கான சட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1987- இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>1இல்சூரிசெவ்<br>கி-பா-62 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L ,Business(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15676 | பிறப்பு-1993 -இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா-47 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்:B.Com, MBA, Tutor Mentor<br>எதிர்பார்ப்பு: படித்த .உத்தியோகமுள்ள ஆண்<br>தொ.இ: G/13978 |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி-பா-16<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்-BBA, Bank<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15677 | பிறப்பு - 1996 - இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>7இல் செவ்<br>கிபா- 33<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15265 |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி-பா-25<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:BA,DO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15681 | பிறப்பு-1994 - இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கிபா-18<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: PHD, Scientist (france)<br>எதிர்பார்ப்பு - விவாகரத்தானவர்<br>தொ.இ: G/15182 |
| பிறப்பு: 1996- இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி-பா-31<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்- BSC, Master, Software Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/15683 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா:14 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc,Researcher (NGO)<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்.<br>தொ.இ: G/12936 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி-பா- 2 3/4<br>1இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: BA,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15684 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா:17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/12110 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



# ஜனாதிபதி தலைமையில் தேசிய சுதந்திர தின நிகழ்வு


(கொழும்பு)

இலங்கையின் 78ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் சுதந்திர சதுக்க வளாகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று சிறப்பாக நடைபெற்றது. “இலங்கையை கட்டியெழுப்புவோம்” என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்ற இந் நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் உட்பட சுமார் 400 விருந்தினர்களுடன், முப்படை மற்றும் காவல்துறை பிரிவைச் சேர்ந்த 4,500இற்கும் மேற்பட்ட படையினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


இதேவேளை, இலங்கையின் 78ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு, இலங்கை இராணுவத்தின் 9,158 ஏனைய தரநிலை வீரர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (நி)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நாட்டின் சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினம் கிளிநொச்சியில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. (படம்- தேவானந்தன்)

# கலைக்குரிசிலுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகினால் 2026 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் வழங்கப்படவுள்ள கலைக்குரிசில், இளங்கலைஞர், சிறந்த நூல் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் நடுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விருதுகள் மற்றும் நடுவர்களுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு அல்லது விண்ணப்பப்படிவங்களை www.np.gov.lk/ www.edumin.np.gov.lk எனும் இணையத்தளங்களில் பதிவிறக்கி உரிய சுற்று நிருபத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய எதிர்வரும் 2026.03.31 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் அலகிற்கு கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவலுக்கு 021 205 4105 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொள்ளுமாறு உதவிப் பணிப்பாளர் நி.தர்சினி அறிவித்துள்ளார். (8)

## சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய

# மஹா கும்பாபிஷேகம் நாளை

(யாழ்ப்பாணம்)

சொக்கவளவு சோதி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஸ்டா அஷ்டபந்தன உத்தம நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.20 மணிமுதல் 8.35 வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

கர்மாரம்பம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

எண்ணெய் காப்பு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது. பிரதிஷ்டா பிரதமகுரு புன்னாலைக் கட்டுவன் கிரியாக்ரமஜோதி, ஆகம பிரதிஷ்டா உதயபானு சிவஸ்ரீ கிருஷ்ணபிரணவக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள மஹா கும்பாபிஷேகத்தில் ஆசியுரையினை புன்னாலைக்கட்டுவன் சித்தாந்த பானு தேசமான்ய பண்டிதர் சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்களும் ஈவினைப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு ஜோதிட பூஷணம் சிவஸ்ரீ தி.கெங்காதரக் குருக்கள் அவர்களும் புன்னாலைக்கட்டுவன் பிரம்மஸ்ரீ பா. சுந்தரராஜசர்மாவும் வழங்கவுள்ளார்கள்.

அருளுரையினை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் நேர்முக வர்ணனையினை பிரசங்க சக்கரவர்த்தி சைவப் புலவர் சி.கா.கமலநாதன் மற்றும் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் அவர்களும் வழங்கவுள்ளார்கள். (8)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் வருடாந்த பொதுக்கூட்ட நிகழ்வானது நாளை வெள்ளிக்கிழமை இணையத்தின் தலைவர் ந.சுகிர்தராஜ் தலைமையில் கைலாசபிள்ளையார் கோயில் அருகாமையிலுள்ள ராஜா கீறிம் கவுஸ் மண்டபத்தில் காலை பத்துமணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.


நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா அவர்களுக்கு "நம் மண்ணின் வானிலை வல்லோன்" என்ற கௌரவமும் வழங்கி வைக்கப்படவுள்ளது. அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினரின் கோரிக்கைக்கு அமைவாக பருத்தித்துறையில் உள்ள 521 ஆம் படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இரத்ததான நிகழ்விற்கு இரத்ததானம் செய்ய ஆர்வம் உள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இராணுவ மேஜர் டி.பி. விஜயசிறிவர்த்தன அறிவித்துள்ளார். (8-69)



இலங்கையின் 78 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு "பனைமரம் என்னும் கற்பகத் தருவினைப் பேணிப் பாதுகாப்போம்" எனும் நோக்கத்தோடு யாழ். மாவட்ட சுதந்திரதின நிகழ்வில் அரசாங்க அதிபர் பிரதீபன் அவர்களினால் யாழ்ப்பாணத்தின் அடையாளமான பனைமரம் யாழ்.மாவட்டச் செயலக முன்றலில் நேற்றையதினம் நாட்டிவைக்கப்பட்டது.

# இலங்கையின் 78 ஆவது சுதந்திரதின நிகழ்வுகள்



யாழ்.மாவட்டச் செயலகம்



கிளிநொச்சி மாவட்டச் செயலகம்



முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்



மன்னார் மாவட்டச் செயலகம்




வவுனியா மாவட்டச் செயலகம்



மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி



பருத்தித்துறை நகரசபை



பருத்தித்துறை பிரதேச செயலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் வளைகுடாவில் எண்ணெய்; அகழ்வாராய்ச்சி பணிகளில் தாமதம்

(கொழும்பு)

மன்னார் வளைகுடாவில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச்சி பணிகளுக்கான சர்வதேச விலைமனு நடைமுறை, நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்கு காரணமாக தாமதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை பெற்றோலிய மேம்பாட்டு அதிகாரசபை இந்த மாத தொடக்கத்தில் சர்வதேச ஏலத்தை நடத்தத் திட்டமிட்டிருந்தது.

இருப்பினும், சட்ட சிக்கல்கள் காரணமாக அது தடைப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின்படி, அகழ்வாராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் சர்வதேச போட்டி ஏல முறை மூலமே நடத்தப்பட வேண்டும்.

இது குறித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ. ராஜகருண கூறுகையில், "சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன.

அனைத்து சட்டச் சிக்கல்களும் தீர்க்கப்பட்ட பின்னரே விலைமனு விடப்படும்" எனத் தெரிவித்தார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தியாவின் "கெய்ர்ன் இந்தியா" நிறுவனம் நடத்திய ஆய்வில், மன்னார் வளைகுடாவில் உள்ள பராகுடா மற்றும் டொராடோ ஆகிய 2 கிணறுகளில் ஹைட்ரோகார்பன் படிவுகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இலங்கையின் கடல் பகுதியில் காவேரி படுகை, மன்னார் படுகை, தெற்கு இலங்கை படுகை, கிழக்கு இலங்கை படுகை என நான்கு முக்கிய படுகைகள் உள்ளன.

பாராளுமன்ற ஊடகப் பிரிவின் 2021 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, மன்னார் படுகையில் உள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களின் மதிப்பு சுமார் 267 பில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் இந்த அகழ்வாராய்ச்சி திட்டங்களில் பங்கேற்க இந்தியா மற்றும் கட்டார் போன்ற நாடுகளைச் சேர்ந்த எண்ணெய் நிறுவனங்கள் ஏற்கனவே ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்தத் தடைகள் நீங்கும் பட்சத்தில், இலங்கை தனது எரிசக்தி தேவையில் தன்னிறைவு பெறுவதுடன் பொருளாதார ரீதியாகவும் பெரும் வளர்ச்சியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## வேலை வாய்ப்பு



வடமராட்சி– நெல்லியடிப் பகுதியில் இயங்கிவரும் இரண்டு மகளிர் அழகு நிலையங்களிற்கு "அழகுக்கலை" பயிற்சி பெற்ற, அனுபவம் உள்ளவர்கள் தேவை
ஆற்றலின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும்

077 914 3171 – இயக்குநர்

(C-4940)

## தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## பொதுக் கூட்ட அறிவித்தல் 2026

FWC


மேற்படி பொதுக்கூட்டம் 08.03.2026 ஞாயிறு காலை 10.00 மணிக்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயிலடியில் அமைந்துள்ள வெளிக்கள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பிரேரணைகளை சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் இன்றிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் 133, செம்மணி வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**ஆ.கதிர்காமநாதன்**
**செயலாளர்,**
**தேசிய வெளிக்கள நிலையம்,**
**தொண்டைமானாறு.**

(6737)

## சேவை நலன் பாராட்டு




**திரு. சின்னையா நித்தியானந்தராஜா (SLTS- I)**
(BBA, PGDE)

**சேவை விபரம்**

- யா/யாழ்ற்றன் கல்லூரி
  1998.09.14 - 2006.12.31
- யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
  2007.01.01 - 2015.02.08
- யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
  2015.02.09 - 2023.06.27
- யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
  2023.06.28 - 2026.02.05

ஆசிரியப் பணியில் கணக்கீட்டு பாட ஆசிரியராக மாணவர் உள்ளங்களை வென்று சிறப்பாக தனது சேவையை நிறைவு செய்து 2026.02.05 இன்று ஓய்வு பெறும் எமது வித்தியாலய ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் :
**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,**
**யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.**

(C-4942)

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் பெப்ரவரி 20, முதல் ஏற்றுக்கொள்ளப்படும் மற்றும் விண்ணப்பங்களுக்கான கடைசி திகதி மார்ச் 5, என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியான ஆண் மற்றும் பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (நி)

## வேலணை பிரதேசசபை
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்-05.02.2026

வேலணை பிரதேசசபைக்கு சொந்தமான பழைய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. பொருட்களை அன்றைய தினமே காலை 9.00 மணி முதல் பார்வையிடமுடியும் என்பதுடன் கேள்வியில் பங்குபற்றுபவர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி மீளளிக்கமுடியாத கேள்விவைப்பு பணமாக ரூபா.500 இனை வேலணை பிரதேசசபையில் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். கேள்வியில் சித்தியடைவோர் உரிய தொகையினை முழுமையாக செலுத்தி அன்றைய தினமே பி.ப.4.00 மணிக்கு முன்னதாக அலுவலகத்திலிருந்து பொருட்களை எடுத்துச்செல்லுதல் வேண்டும்.

**இடம் :-** **தலைமை அலுவலகம், வேலணை பிரதேச சபை.**
**காலம் :- 17.02.2026 (செவ்வாய்க்கிழமை)**
**நேரம் :- மு.ப.10.00**

**ஏலவிற்பனை பொருட்கள் :-** பழைய இரும்பு, பழைய வாகன பற்றரிகள், பழைய வாகன ரயர்கள், பழைய ஓடுகள், அகற்றப்பட்ட கூரை மரங்கள், பழைய பத்திரிகைகள், கண்ணாடிப் போத்தல்கள், பிளாஸ்ரிக் போத்தல்கள், விறகுகள், கணனி உதிரிப்பாகங்கள், பழைய இலத்திரனியல் பொருட்கள், பழைய மேசைகள், பழைய அலுமாரிகள், பழைய கதிரைகள்

**குறிப்பு :-** ஏலதாரராக கலந்து கொள்பவர்கள் சபையின் சட்ட நடைமுறைகளுக்கும் ஏலச்சபையின் அறிவுறுத்தல்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

**தவிசாளர்,**
**வேலணை பிரதேச சபை,**
**வேலணை.**

(C-4939)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 05, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள இலக்கம் 154 எனும் ஆதனம் எமது ஆதனப்பதிவேட்டில் ஆறுமுகம் சுப்பிரமணியம் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தினை ஆறுமுகம் சுப்பிரமணியம் செல்வரத்தினமும் பெண் சற்குணதேவியும் யாழ் நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முகதாவில் **2007/12/30** ஆம் திகதி 10265ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் செல்வரத்தினம் மகள் காவேரிக்கு தமது சீவிய உரித்துக்கு அமைவாக நன்கொடை வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் 2007.12.30 ஆம் திகதி 10265 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி தனது சொந்தமும் ஆட்சியுமான ஆதனமாகும் என்ற வகையில் குறித்த உறுதி மூலம் உரிமை கோருகிறார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட 5 ஆம் வட்டாரத்தில் வரி இல 154 இனைக் கொண்ட ஆடியபாதம் வீதி **J/109**, இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்த நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை பீத்தோட்டமும் மறுபிரிவுகளும் நில.பர. 3 குளி 6,3/4 இலும் வீடும் கிணறும் பயிர் வகைகளும் கிழக்கே இருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் வடக்குக் காணிக்குள் நிற்கும் பலாமரம் ஒன்றும் துண்டு 1 என்றும் என்னால் சுட்டிய நில.பர.3 குளி 6, 3/4 இதன் எல்லை:
கிழக்கு: றோட்டும் சிறிவாலய அம்மன் கோவில் காணியும்
வடக்கு: கையொடுங்கை
மேற்கு : கார்த்திகேசு பெண் அன்னப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம்
தெற்கு : சிறி சட்டநாதர் சிவன்கோவில் ஆதனம் இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை செல்வரத்தினம் மகள் காவேரி என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வரத்தினம் மகள் காவேரி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C-4938)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கடாபியின் மகன் சுட்டுக் கொலை



(ஜிந்தான்)

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி முஅம்மர் கடாபியின் மகனும், ஒரு காலத்தில் அவரது அரசியல் வாரிசாகக் கருதப்பட்டவருமான சைஃப் அல் - இஸ்லாம் கடாபி, நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தத் தகவலை அவரது அரசியல் குழுவின் தலைவர் மற்றும் லிபிய செய்தி நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளன.

லிபியாவின் மேற்குப் பகுதியில் உள்ள ஜிந்தான் (Zintan) நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து அவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நான்கு பேர் கொண்ட ஆயுதமேந்திய கும்பல் ஒன்று அவரது வீட்டிற்குள் புகுந்து இந்தத் தாக்குதலை நடத்தியதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு முன்னதாக அந்த வீட்டிலிருந்த கண்காணிப்பு கேமராக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

1972ஆம் ஆண்டு பிறந்த சைஃப் அல்-இஸ்லாம், தனது தந்தை முஅம்மர் கடாபியின் 42 ஆண்டுகால ஆட்சியில் மிகவும் செல்வாக்குமிக்க நபராகத் திகழ்ந்தார்.

ஆரம்ப காலத்தில் லிபியாவை நவீனமயமாக்க விரும்பும் ஒரு சீர்திருத்தவாதியாக மேற்கத்தேய நாடுகளால் பார்க்கப்பட்டார்.

2011ஆம் ஆண்டில் நேட்டோ ஆதரவுடன் நடந்த கிளர்ச்சியின்போது, போராட்டக்காரர்களை ஒடுக்கியதாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

கிளர்ச்சியின் முடிவில் இவரது தந்தை கொல்லப்பட்ட பிறகு, சைஃப் அல்-இஸ்லாம் ஜிந்தான் நகரில் பிடிபட்டு சுமார் ஆறு ஆண்டுகள் சிறையில் வைக்கப்பட்டார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இவரைத் தேடி வந்தது. 2015ஆம் ஆண்டு திரிபோலி நீதி மன்றம் இவருக்கு மரண தண்டனை விதித்த போதிலும், 2017ஆம் ஆண்டில் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

2021ஆம் ஆண்டு லிபிய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்த சைஃப் அல்-இஸ்லாம், நீண்ட இடைவேளைக்குப் பிறகு மீண்டும் அரசியலில் நுழைய முயன்றார்.

ஆனால், பல்வேறு காரணங்களால் அந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது அவரது மறைவு, ஏற்கனவே ஆயுதமேந்திய குழுக்களால் பிளவுபட்டுள்ள லிபியா வில் மேலும் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பது குறித்து லிபிய அதிகாரிகள் விசாரணை களைத் தொடங்கியுள்ளனர். (3)



## ஒருபுறம் பேச்... மறுபுறம் கோர...



(கீவ்)

**ஐக்கிய அரபு எமிரேட்சி... நேற்று உக்ரைன் - ரஷ்யா இடைே... அமைதிப் பேச்சுவார்த்தை ந... பெற்ற நிலையில், உக்ரைன் மீ... 450 ட்ரோன்கள் மற்றும் 70 ஏ... கணைகளை வீசி நேற்று முன்தின... மிக மோசமான தாக்குதலை ரஷ்ய... நடத்தியது.**

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் - ரஷ்யா இடையே, ஆரம்பமாகிய போர், நான்காண்டுகளை எட்டியுள்ளது.

இப்போரை முடிவுக்கு கொண்டுவர பல்வேறு முயற்சிகள் மேற்கொண்ட நிலையில், போர் நிறுத்தம் ஏற்படவில்லை. இதையடுத்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், 20 அம்ச அமைதித் திட்டத்தை முன்மொழிந்தார்.

இதற்கு இருநாடுகளும் அரைமனதுடன் சம்மதம் தெரிவித்தன.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது குறித்து, ரஷ்யா - அமெரிக்கா - உக்ரைன் நாடுகள் பங்கேற்கும் முத்தரப்பு பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டது.

இதற்கான முதற்கட்ட பேச்சு, மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்சின் அபுதாபியில் நடந்தது.

அடுத்தக்கட்ட பேச்சு வார்த்தை நேற்று மீண்டும் அபுதாபியில் நடைபெற்றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு ரஷ்யா, உக்ரைன் மீது கடுமையான தாக்குதலை நடத்தியதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி

## ஈரானின் ஆளில்லா விமானத்தை சுட்டு வீழ்த்திய அமெரிக்கா



(வோஷிங்டன்)

அரேபிய கடலில் யு.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி கப்பலை நோக்கி பறந்து கொண்டிருந்த ஈரானிய ஆளில்லா விமானத்தை அமெரிக்க இராணுவம் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தியுள்ளது.

"ஈரானிய ஷாஹெட்-139" ஆளில்லா விமானம் கப்பலை நெருங்கும் போது அமெரிக்க F-35 போர் விமானத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் ராய்ட்டர்ஸிடம் தெரிவித்தார்.

இந்த தாக்குதல், இப்பகுதியில் அமெரிக்க இராணுவம் குவிக்கப்பட்டு வரும் நிலையில் நடந்துள்ளது.

இந்த வார இறுதியில் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெறவிருப்பதற்கு முன்னதாக இந்தச் சம்பவம் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ...சுவார்த்தை
# ...த் தாக்குதல்!

ில்
யே
டை
ீது
ரவு
ரம்
பா



தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ள தாவது:

ஒரே இரவில் 450 நீண்டதூரம் சென்று தாக்கும் திறன் கொண்ட ட்ரோன்கள் மற்றும் 70 ஏவுகணைகளை ஏவி ரஷ்யா தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதல் குறிப்பாக உக்ரைனின் மின்சார கட்டமைப்பை குறி வைத்தே நடத்தப்பட்டது.


உக்ரைனில் கடும் குளிர் நிலவி வரும் சூழலில், மக்களுக்கு மின்சாரம், குடிநீர் மற்றும் வெப்ப வசதி கிடைக்காமல் செய் வதே ரஷ்யாவின் நோக்கம்.

உக்ரைனை காக்க கூடுதலான வான் பாது காப்பு ஆயுதங்களை நட்பு நாடுகள் வழங்கி உதவ வேண்டும் என்று அவர் கூறினார்.

இத்தாக்குதலில் குடியிருப்பு கட்டடங்கள், பாடசாலை, எரிவாயு நிலையம் மற்றும் இரண்டாம் உலகப் போர் வரலாற்று அருங் காட்சியகம் ஆகியவை சேதமடைந்துள்ளன.

அத்துடன் இத்தாக்குதலில் 10 பேர் வரை காயமடைந்துள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. (3)

## 4 மணிநேர நீச்சல்
## தனது குடும்ப உறுப்பினர்களை உயிருடன் மீட்ட 13 வயது சிறுவன்



(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் கடற்கரைப் பகுதியில் பலத்த காற்று காரணமாக நடுக்கடலுக்கு இழுத்துச் செல்லப்பட்ட தனது தாய் மற்றும் இரண்டு உடன்பிறப்புகளின் உயிரைக் காப்பாற்ற, 13 வயது சிறுவன் ஒருவன் சுமார் 4 கிலோமீற்றர் தூரம் சீற்றமான அலைகளுக்கு மத்தியில் நீந்தி வந்து உயிர்களைக் காப்பாற்றியுள்ள சம்பவம் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு அவுஸ்திரேலியாவின் ஜியோகிராஃப் விரிகுடா பகுதியில், தாயொருவர் தனது 12,13 வயது மகன்கள் மற்றும் 8 வயது மகளுடன் பேடில்போர்டிங் செய்து கொண்டிருந்தபோது, திடீரென வீசிய பலத்த காற்றினால் அவர்களின் மிதவைகள் கரையை விட்டு வெகு தூரம் அடித்துச் செல்லப்பட்டன.

குடும்பம் ஆபத்தில் சிக்கியிருப்பதை உணர்ந்த மூத்த மகனான 13 வயது சிறுவன், உதவி - கோருவதற்காக கரையை நோக்கி தனது கயாக் படகில் செல்ல முயன்றான். ஆனால் படகிற்குள் நீர் புகுந்ததால், அதனை கைவிட்டு கடலில் நீந்தத் தொடங்கினான்.

சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தை அவன் நீந்திக் கடந்தான். முதலில் இரண்டு மணிநேரம் உயிர்காப்பு அங்கி அணிந்து நீந்திய அவன், அது தனது வேகத்தைத் தடுப்பதாக உணர்ந்து, அங்கியை அகற்றிவிட்டு அடுத்த இரண்டு மணிநேரம் அங்கி இல்லாமலேயே நீந்தி கரையை அடைந்து அங்கிருந்தவர்களிடம் உடனடியாக தகவல் வழங்கினான்.

இதையடுத்து நடுக்கடலில் ஒரு பேடில்போர்டைப் பிடித்துக்கொண்டு தத்தளித்துக் கொண்டிருந்த தாய் மற்றும் மற்ற இரண்டு குழந்தைகளை மீட்புப் படையினர் கண்டுபிடித்து பாதுகாப்பாக மீட்டனர்.

இந்தச் சம்பவம் வயதை விட மனஉறுதியும் துணிச்சலுமே உண்மையான வீரத்தை நிரூபிக்கும் என்பதற்கான ஓர் உயிர்ப்பான உதாரணமாக உலகெங்கும் பேசப்பட்டு வருகிறது. (3)

## இணைய விளையாட்டுக்களின் தாக்கம்; ஒரே குடும்பத்தில் பறிபோன உயிர்கள்



(டில்லி)

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் காஸியாபாத்தில் உள்ள "பாரத் சிட்டி" குடியிருப்பு வளாகத்தில், இன்று அதிகாலை 2:15 மணியளவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுமிகள் உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

12, 14 மற்றும் 16 வயதுடைய மூன்று சகோதரிகள், தங்கள் குடியிருப்பு தொகுதியின் 9 ஆவது மாடியிலிருந்து வரிசையாகக் குதித்துள்ளனர்.

பலத்த சத்தம் கேட்டு ஓடி வந்த பாதுகாவலர்களும் பெற்றோரும், அவர்களை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், அவர்கள் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணையில் இந்தச் சிறுமிகள் கொரிய கலாசாரம் மற்றும் கொரியன் லவ் கேம் ஆகியவற்றிற்குத் தீவிரமாக அடிமையாகியிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்கள் விட்டுச் சென்ற 8 பக்க கடிதத்தில் "மன்னிக்கவும் அப்பா, கொரியா தான் எங்கள் உலகம், கொரியா தான் எங்களின் மிகப்பெரிய காதல்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

கொவிட் காலத்திலிருந்தே இணைய விளையாட்டுகளுக்கு அடிமையான இவர்கள், கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பாடசாலைக்கு செல்லாமல் வீட்டிலேயே முடங்கியுள்ளனர்.

சிறுமிகளின் தந்தை சேத்தன் குமார் கூறுகையில், "அவர்கள் விளையாட்டில் மூழ்கிக் கிடந்ததால் கைபேசியை பயன்படுத்தத் தடைவிதித்தேன். அது அவர்களை இந்த நிலைக்குத் தள்ளும் என்று நினைக்கவில்லை. எந்தப் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை கைபேசியில் மூழ்க விடாதீர்கள்" என கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

இந்த மரணத்துக்கு காரணமானதென கருதப்படும் இணைய விளையாட்டின் பின்னணி மரணத்தை தூண்டியதா என்பது குறித்து பொலிஸார், சைபர் கிரைம் பிரிவினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி மாத இராசி பலன்கள்

## மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும்!



**கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு(வ) - பஞ்சம ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - இலாப ஸ்தானத்தில் புதன், சனி, ராகு என கிரகநிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இரத்த சம்பந்தமான உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மேஷ இராசி அன்பர்களே! இந்த மாதம் இராசிநாதன் செவ்வாயின் சஞ்சாரத்தால் நல்ல பலன்களை பெறப் போகிறீர்கள்.

மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக்கவலை குறையும். எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். திட்டமிட்டபடி பயணங்கள் செல்ல முடியும்.

தொழில் ஸ்தானத்தில் கிரகங்கள் வலிமையாக இருப்பதால் கூடுதல் இலாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நல்ல மாற்றங்களை எதிர்பார்க்கலாம். அலுவலக வேலைகள் உடனே நடக்கும். நல்ல பெயர் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளை கேட்பதை தவிர்ப்பது நல்லது.

கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பெண்களுக்கு அதிஷ்டங்கள் ஏற்படும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். அரசியல் துறையினருக்கு எதிர்பார்க்கும் பதவிகள் வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.

**அஸ்வினி:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் முன்னேற தேவையான வாய்ப்பு கிடைக்கும். தொழில் போட்டிகள் விலகும். தேவையான நிதியுதவி கிடைக்கக் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக பணிகளை கவனித்தாலும் அலுவலக வேலைகளில் தாமதம் இருக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்




களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை உண்டாகும். வாழ்க்கைத் துணையுடன் இன்பச் சுற்றுலா சென்று வருவீர்கள்.

**பரணி:** இந்த மாதம் குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு செயற்படுவார்கள். பிள்ளைகள் மூலம் பெருமை உண்டாகும். புத்தி சாதுரியத்தால் பொருள் சேர்க்கை ஏற்படும். தாய்வழி உறவினர் மூலம் உதவிகள் கிடைக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த காரியங்கள் ஒவ்வொன்றாக நடந்து முடியும். பாராட்டுக்களால் மன நிம்மதி கிடைக்கும்.

**கார்த்திகை 1ஆம் பாதம்:** இந்த மாதம் தடைப்பட்ட காரியங்களில் தடை நீங்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடை விலகும். தேவையான பண உதவி கிடைக்கும். தொழிலில் சிறு சிறு இடையூறுகள் ஏற்பட்டு மறையும். அலைச்சல் தவிர்க்க முடியாததாக இருக்கும். அதற்கான பலனும் கிட்டும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**பரிகாரம்:** துர்க்கை அம்மனை வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். வீண் அலைச்சல் குறையும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு - செவ்வாய் - வெள்ளி ;
**சந்திராஷ்டம தினங்கள்:** 10, 11 ,12
**அதிஷ்ட தினங்கள்:** 18, 19

## பணவரத்து அதிகரிக்கும்!



**கிரகநிலை** - தனவாக்கு ஸ்தானத்தில் குரு(வ) - சுக ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - தொழில் ஸ்தானத்தில் புதன், சனி, ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** சுமூகமான அணுகுமுறையால் வெற்றி காணும் ரிஷப இராசி அன்பர்களே! இந்த மாதம் இராசிநாதன் சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் இருக்கிறார்.


ஆனாலும் மற்ற கிரகங்கள் அனைத்தும் அனுகூலமாக இருக்கிறார்கள். குரு பார்வையால் நல்ல யோகமான பலன்களைப் பெறப் போகிறீர்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் இருக்கும் கவலைகள் அகலும்.

சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான விடயங்கள் சாதகமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கு இடையே உறவு பலப்படும்.

பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். கலைத்துறையினருக்கு வீண் அலைச்சல் இருக்கும். நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். அரசியல் துறையினருக்கு புதிய முயற்சிகள் கை கொடுக்கும். மாணவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். பாடங்களில் கவனம் செலுத்துவது குறையக்கூடும்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் காரிய தடை, தாமதம் உண்டாகலாம். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவதும் கவனமாகச் செயற்படுவதும் நல்லது. குடும்ப பிரச்சினைகள் தீரும். எதுவும் வரட்டும் பார்க்கலாம் என்ற முரட்டு தைரியம் கூடாது.

பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டு நீங்கும். கூட்டுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நற்பலன்களே உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் பாராட்டு பெறுவீர்கள்.




**ரோகிணி:** இந்த மாதம் எந்த ஒரு காரியத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாத குழப்பம் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சொன்ன சொல்லை காப்பாற்றி விடுவீர்கள். அதனால் மதிப்புக் கூடும். எதிர்ப்புகளை சமாளித்து முன்னேற எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். உங்களின் புத்தி சாலித்தனத்தால் சில சாதனைகளைச் செய்து முடிப்பீர்கள். புது முயற்சிகளில் ஈடுபட காலம் கனிந்துள்ளது.

**மிருக சீரீடம் 1, 2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் திட்டமிட்டபடி செயலாற்றி வெற்றியை எட்டிப்பிடிப்பார்கள். வியாபார போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கலாம். சிலருக்கு கூடுதல் பொறுப்புகள் வந்து சேரும். வருமானம் கூடும். பாராட்டு கிடைக்கும். அதனால் மனதிருப்தி உண்டாகும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**பரிகாரம்:** நவகிரகத்தில் சுக்கிரனை பூஜிக்க வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன் - வெள்ளி
**சந்திராஷ்டம தினங்கள்:** 13, 14
**அதிஷ்ட தினங்கள்:** 20, 21

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் வெதுப்பகம் மீது சுகாதாரத்துறை நடவடிக்கை

(மன்னார்)

மன்னாரிலுள்ள வெதுப்பகம் ஒன்றில் உணவுகளில் பல்லி எச்சம் காணப்பட்டதுடன் எலிகளின் நடமாட்டமும் காணப்பட்ட நிலையில் சுகாதாரத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

மன்னார் பொதுசுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வைத்திய அதிகாரி லூபன் லெம்பேர் மற்றும் அதிகாரிகள் மன்னார் நகரசபை சுகாதார உத்தியோகஸ்தருடன் இணைந்து மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போது குறித்த வெதுப்பகம் சுகாதார சீர்கேட்டுடன் பல நாட்கள் இயங்கி வந்தமை கண்டறியப்பட்டது.

குறித்த வெதுப்பகம் உரிய அனுமதி இல்லாமல் இயங்கி வந்தமை, வெதுப்பக ஊழியர்கள் மருத்துவ சான்றிதல் இன்றி பணியாற்றியமை கண்டறியப்பட்டதை தொடர்ந்து உணவகம் முழுவதையும் சுகாதார துறையினர் பார்வையிட்டனர்.


அதில் பழுதடைந்த பாண்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை, சுகாதாரமற்ற முறையில் பாண்கள் தயாரிக்கப்பட்டிருந்தமை, எலி நடமாட்டம் அதிகளவில் காணப்பட்டமை, உணவுகளில் பல்லி எச்சம் காணப்பட்டமை உணவு பொருட்களில் தூசுகள் காணப்பட்டமை உள்ளடங்கலாக பல்வேறு சுகாதார குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

இதனை தொடர்ந்து சுகாதார துறையினர் குறித்த வெதுப்பகம் மற்றும் வெதுப்பக ஊழியர்கள் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)



புதிய அலைகலை வட்டத்தால் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற கலாமித்ரா விருது விழாவில் இசைத்துறை சார் விருதினை யாழ்.வடமராட்சியைச் சேர்ந்த பா.நாகேந்திரன் பெற்றுள்ளார்.

# சான்றிதழ் வழங்கி வைப்பு!



(வவுனியா)

பாடசாலைக்கு மத்தியஸ்தம் என்னும் தொனிப் பொருளில் தெரிவு செய்யப்பட்ட வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலய மாணவர்களுக்கு மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ்களும், சின்னாங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா அல் இக்பால் மகா வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் எம்.எம்.அன்பஸ் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் அனுசரணையுடன் மத்தியஸ்த சபை ஆணைக்குழு மத்தியஸ்த சபை செயற்பாடுகளை பாடசாலை மட்டத்திற்கு விரிவுபடுத்தியுள்ளது. அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலயத்தின் 5 ஆசிரியர்களுக்கும், 30 மாணவர்களுக்கும் மத்தியஸ்தசபை தொடர்பான செயலமர்வுகள் இடம்பெற்றிருந்தன.

இதனை பூர்த்தி செய்த 30 மாணவர்களுக்கும் மத்தியஸ்தர்களாக தெரிவு செய்தமைக்குரிய சான்றிதழ்களும், அவர்களுக்கான சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (8-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 450 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 450 | 600 | 500 |
| தக்காளி | 200 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 180 | 200 |
| கோவா | 200 | 280 | 300 |
| கரட் | 400 | 400 | 400 |
| பூசணி | 100 | 140 | 120 |
| புடோல் | 150 | 100 | 300 |
| வாழைக்காய் | 100 | 200 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 220 | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 700 |
| வெண்டைக்காய் | 300 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 250 | 260 | 300 |
| பயற்றங்காய் | 400 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 |
| பீற்றூட் | 250 | 300 | 600 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 |
| போஞ்சி | 400 | 200 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 40-120 | 150 |
| தேசிக்காய் | 100 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 160 | 150 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 |
| வல்லாரை | 60 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 |

# இராசிபலன்

05.02.2026
தை 22, வியாழக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 3.08 மணிவரை

உத்தரம் பின்னிரவு 1.36 மணிவரை
சுப நேரம் -8.05-9.35 மணிவரை
இராகு காலம் 2.05-3.35 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

சண்டேசுரர் குருபூசை
சந்திராஷ்டமம்
திருவோணம், அவிட்டம்.

வளவன்




மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேக நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




உங்களின் கருத்துக்கு வரவேற்புண்டு, கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்




உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வர வேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம்.




பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நாவன்மையால் நற்பெயர் கிடைக்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகள் அனுகூலம் தரும்.




குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.




நீண்ட நாளை விருப்பங்கள் நிறைவேறலாம், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

நம் மனம் தான் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

971





புலி அந்த மரப்பாலத்தின் மீது மெல்ல ஊர்ந்து சென்று அக்கரையை நெருங்கிக் கொண்டிருந்ததை இரண்டு பேரும் கவனித்தார்கள். இரண்டு பேருடைய மனத்திலும் ஒரே எண்ணம் உதித்தது.

"ஆகா! படகிலே வந்த பெண்கள்!" என்று இருவரும் ஏக காலத்தில் வாய்விட்டுக் கூறினார்கள்.

பின்னர், "இந்த வாய்க்காலை அடுத்துள்ள தீவின் கரையிலேதான் அந்தப் பெண்கள் இறங்கியிருக்க வேண்டும்" என்றான் வல்லவரையன்.

"காயம்பட்ட சிறுத்தை மிக அபாயகரமானது" என்றார் இளவரசர்.

"பன்றியுடன் புலியையும் கொன்று எடுத்துப் போகத்தான் வேண்டும்."

"இந்த வாய்க்காலை எப்படித் தாண்டுவது? குதிரைகள் மரப்பாலத்தின் மேல் போக முடியாதே?"

"தண்ணீர் கொஞ்சமாகத்தான் இருக்கும் இறங்கிப் போகலாம்."

கரிகாலரின் குதிரையும் அதற்குள் எழுந்து வந்தியத்தேவன் குதிரைக்கு அருகே போய் நின்று கொண்டிருந்தது. எஜமானர்கள் அந்தரங்கம் பேசியது போல் அவையும் தங்களுக்குச் சற்று முன் நேர்ந்த அபாயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டன போலும். இருவரும் தத்தம் குதிரைமீது தாவி ஏறினார்கள், வாய்க்காலில் குதிரைகளை இறக்கினார்கள். வாய்க்காலில் தண்ணீர் அதிகமாக இல்லைதான். ஆனால் சேறும் உளையும் அதிகமாயிருந்தன. குதிரைகள் தட்டுத் தடுமாறித் தத்தளித்துச் சென்றன.

கோடிக்கரைப் புதை சேற்றுக் குழிகளை நினைத்துக் கொண்டு வந்தியத்தேவன் "இந்தச் சேறு ஒன்றும் பிரமாதமில்லை" என்று தைரியமடைந்தான். அதைப் பற்றி கரிகாலருக்குச் சொல்லவும் தொடங்கினான்.

"நண்பா! வெளியிலுள்ள சேற்றைப் பற்றிச் சொல்லப் போய்விட்டாயே? மனிதர்களுடைய உள்ளத்தில் உள்ள சேற்றைக் குறித்து என்ன கருதுகிறாய்? ஒரு தடவை தீய எண்ணமாகிற சேற்றில் இறங்குகிறவர்கள் மீண்டும் கரை ஏறுவது எவ்வளவு கடினம் தெரியுமா?" என்று கரிகாலர் கேட்டார். இளவரசரின் உள்ளம் உண்மையில் சேறு போலக் குழம்பியிருக்கிறது. என்று வந்தியத்தேவன் எண்ணிக் கொண்டான்.

குதிரைகள் மிகப் பிரயாசையுடன் அக்கரையை அடைந்தன. காட்டுக்குள்ளே மிக ஜாக்கிரதையுடன் நாலா புறமும் உற்றுப் பார்த்துக் கொண்டு இருவரும் சென்றார்கள். கரிகாலரின் கையில் வில்லும் அம்பும் தயாராயிருந்தன. வந்தியத்தேவன் தன் வேலையும் புலியின் பேரில் எறிவத ற்கு ஆயத்தமாக வைத்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று, காட்டில் சாதாரணமாகக் கேட்கும் சத்தங்களை அடக்கிக் கொண்டு ஒரு பெண்ணின் 'கிறீச்' என்ற குரல், "அம்மா! அம்மா! புலி!" என்று கதறுவது கேட்டது.


மணிமேகலை மரக்கிளையின் மீது சிறுத்தையைப் பார்த்த அதே சமயத்தில் வசந்த மண்டபத்தில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த தோழிப் பெண் ஒருத்தியும் அந்தப் புலியைப் பார்த்து விட்டு அவ்விதம் அலறினாள். அந்தக் குரல் இரு நண்பர்களின் செவிகளிலும் விழுந்து ரோமாஞ்சனத்தை உண்டு பண்ணியது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பாவம் செய்யாத துறவி



ஏகநாத சுவாமிகளை வணங்குவதற்காக வந்த ஒருவர், "சுவாமி! தாங்கள் யாருடனும் கோபம் கொள்வது இல்லை, சண்டை போடுவது இல்லை, எப்பொழுதும் அன்பும் அமைதியும் குடி கொண்டவராக உள்ளீர்கள்.

எப்படித் தங்கள் வாழ்க்கை மட்டும் சிக்கல் அற்றதாக உள்ளது? ஏன் எங்களால் மட்டும் அப் படி இருக்க முடியவில்லை?" என்று கேட்டார்.

அதற்கு ஏகநாதர், "என் செய்தி இருக்கட்டும். இன்றைக்கு ஏழாம் நாள் நீ இறந்துவிடப் போகிறாய்" என்றார்.

ஏகநாதரின் சொற்களில் யார்தான் ஐயம் கொள்ள முடியும்?

"கடவுளே! என் தலைவிதி இப்படியா ஆக வேண்டும்" என்று அழுது புலம்பிக் கொண்டே அவன் வீடு வந்து சேர்ந்தான்.

தன் மனைவி மக்களை அழைத்துத் தனக்குப் பிறகு சொத்தினை அவர்கள் எப்படிப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்று கூறினான். தான் செய்த பாவங்களை எல்லாம் நினைத்து அழுதான். ஆறு நாள் கழிந்தது.

ஏழாம் நாள் ஏகநாதர் அவனைப் பார்க்க வந்தார். "அன்பனே! நீ இந்த ஏழு நாட்களில் யார் யாரிடம் சண்டை போட்டாய்? என்னென்ன பாவங்கள் செய்தாய்? சொல்" என்று கேட்டார்.

அதற்கு அவன், "சாவு என் கண் முன்னால் நிற்கும் போது பாவம் செய்ய எனக்கு எது நேரம்?" என்று பதில் சொன்னான்.

உடனே ஏகநாதர், "மரணம் எப்பொழுதும் என் கண் முன்னால் நின்று கொண்டிருப்பதாக நினைப்பதால் தான் நான் பாவங்கள் செய்வதில்லை.

இப்பொழுது புரிகிறதா? உனக்கு இதை விளங்க வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஏழு நாட்களில் மரணம் என்று பொய் சொன்னேன். கவலைப்படாதே. போய் வா" என்றார்.

அவனும் ஏகநாத சுவாமிகளின் காலில் விழுந்து வணங்கி விடை பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பணிவுடன் கூடிய திறமையே மனித குலத்திற்கு உண்மையில் பயனுள்ளது.
>
> – அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## பாவத்தை விலத்திய பிலாத்து மன்னனை சாணக்கியன் எம்.பி கற்றறிய வேண்டும்

இயேசுபிரானை சிலுவையில் ஏற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. பிலாத்து மன்னன் அதனை மறுக்கின்றான். ஆயினும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கிறது.

ஏதும் செய்ய முடியாத நிலையில் பிலாத்து மன்னன் தண்ணீர் கொண்டு தன் கரங்களைக் கழுவி; இந்தப் பாவம் என்னைச் சேராதிருப்பதாக என்கிறான்.

ஆக, கங்கையில் நீராடி பாவம் போக்குவது முதல் பிலாத்து மன்னன் தன் கரங்களை நீரால் கழுவி பாவம் சேரா வண்ணம் பார்த்துக் கொண்டது ஈறாக, பாவ விமோசனத்தில் **நீர்** எத்துணை முதன்மையானது என்பது உணர்தற்குரியது.

இப்போது பிலாத்து மன்னனின் காதை இவ்விடத்தில் எதற்கு? என்று நீங்கள் கேட்கலாம்.

ஆம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சில தீர்மானங்கள் கண்டு வேதனையடைகின்றோம். தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ என்று கூறுமளவில், இலங்கைத் தமிழரசுக் கட்சியை நம் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் கண்ணீரால் காத்தனர்.

உண்மை. தமிழரசுக் கட்சி முன்னெடுத்த அகிம்சைப் போராட்டங்கள் தொடக்கம் அந்தக் கட்சியின் வட்டுக்கோட்டை பிரகடனம் வரை எல்லாத் தளங்களிலும் நம் முன்னவர்கள் திரிகரணசுத்தியோடு தமிழரசுக் கட்சிக்காகத் தங்களைத் தியாகம் செய்தனர்.

அவர்களின் தியாகம் தேர்தலில் நிற்பதற்காகவல்ல. ஏன்? பிரதேச சபையில் ஓர் உறுப்பினர் என்ற பதவிக்குக் கூட அவர்கள் ஆசைப்பட்டதில்லை. சுருங்கக்கூறினால், பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சில் வழங்கப்படுகின்ற சமாதான நீதிவான் பதவியைக் கூட, அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை.

தமிழரசுக் கட்சிக்கான அவர்களின் தியாகம்; எங்கள் தமிழினம் உரிமையோடு வாழ வேண்டும் என்பதற்கானது மட்டுமே.

அந்த உன்னத வேட்கையோடு தமிழரசுக் கட்சிக்காக உடல் ஆவி பொருள் அத்தனையையும் ஈகை செய்தவர்களில் பலர் இன்றில்லை.

அந்தத் தியாகங்கள் எல்லாவற்றையும் மறந்து தமிழரசுக் கட்சி ஒரு சிலரின் தீர்மானங்களை நிறைவேற்ற நினைப்பது மிகப் பெரும் கொடுமை.

அதிலும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வகித்த தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் பதவியை வெறுதாக்கி, அதனை பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு வழங்கியது. அதனை சாணக்கியன் உவந்து ஏற்றுக் கொண்டது என்பன அந்தக் கட்சி தனக்குத் தானே செய்கின்ற ஈனத்தனமாகும்.

ஆம், கட்சி தீர்மானித்திருந்தாலும் அந்தப் பதவி எனக்கு வேண்டாம் எனக் கூறுகின்ற சான்றாண்மை சாணக்கியனிடம் இருந்திருக்க வேண்டும்.

அதைச் செய்யாத சாணக்கியன் பிலாத்து மன்னனை கற்றறிவது அவசியம்.

ஏனெனில் குறித்த பதவியை சாணக்கியன் ஏற்றுக் கொண்டதன் மூலம் வடக்கு – கிழக்கு என்ற பிரதேசவாதத் தீயை மூட்டிவிட முற்பட்டுள்ளார் என்பது மட்டும் தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. இஃது தமிழினத்துக்கு அவ்வளவு நல்லதல்ல.

## புகழ்பூத்த அதிபர் பஞ்சலிங்கம் அவர்களின் நினைவு நிகழ்வு

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் ஓய்வுநிலை அதிபரும் உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் ஆகிய முன்பள்ளிகளின் நிறுவுனருமான அமரர் அப்பாத்துறை பஞ்சலிங்கம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் 07 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09 மணியளவில் உரும்பிராய் கிட்ஸ் பார்க் மண்டபத்தில் நடைபெறும். *(ந-7)*

## சுதந்திரதின நிகழ்வில் நிகழ்ச்சிகள் மட்டுப்பாடு

### விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

இலங்கையின் 78 ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வுகளில் வழமைபோல கலந்து கொள்ளும் இராணுவப் படையணிகள் நாற்பது வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர்,

இவ்வாறான கட்டுப்பாடுகள் பணத்தை மீதப்படுத்தவா? வழமைபோல் சுதந்திரதின ஊர்வலத்தில் முதலில் கொண்டுவரப்படும் சிங்கத்தின் உருவம் தாங்கிய பேழையும் இருக்கவில்லை. இந்த சிங்கத்தின் உருவம் வீசப்பட்டுள்ளது.

அதில் கலந்து கொள்ளும் இராணுவ வீரர்களும் அதன் அபிமானத்தை உணர முடியாத நிலையை உருவாக்கியுள்ளனர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கூறுகிறார், கடனுக்கு வாங்கிய ஆயுதங்களை காட்சிப்படுத்துவதால் நாட்டுக்கு பெருமை ஏற்படப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அப்படியென்றால் கடன் வாங்கி கட்டிய வீட்டில் இருக்க வேண்டாம் அதுவும் பெருமையைத் தராது. அதேபோல் கடனுக்கு வாங்க தீர்மானித்துள்ள டபெல் கெப் வாகனங்களில் செல்ல வேண்டாம். அது உங்களுக்குப் பெருமை இல்லை என குறிப்பிட்டுள்ளார். *(ம-7)*

## யாழ். பல்கலை ஊழியர்கள் இன்று பணிப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறியதைக் கண்டித்து, இன்று வியாழக்கிழமை ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அதிரடியாக அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் குறித்த போராட்டமானது இன்று காலை 09.30 மணிக்கு பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக ஊழியர் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தை மாதத்திற்குள் அமுல்ப்படுத்துவதாக நிர்வாகம் உறுதியளித்திருந்த தீர்மானங்கள் தொடர்பில் , இதுவரை எவ்வித திருப்திகரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஒவ்வொருமுறையும் பல்கலைக்கழக நலன் கருதி நிர்வாகத்திற்குப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும் நிர்வாகம் பேச்சுவார்த்தைகளைக் காலத்தை இழுத்தடிக்கும் ஒரு தந்திரோபாயமாகக் கையாள்கின்றதோ? என்ற ஐயப்பாடு எமக்கு எழுந்துள்ளது.

எமது நல்லெண்ணத்தை நிர்வாகம் தவறாகப் பயன்படுத்துவதால், போராட்டத்தைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

இந்தப் போராட்டத்திற்குப் பின்னரும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றுள்ளது. *(ம-7)*

## கொக்குவிலில் தீ விபத்து புடவையகம் சேதம்

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்திப்பகுதியில் அமைந்துள்ள புடவையகம் ஒன்றில் நேற்று(04) புதன்கிழமை இரவு தீ விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

கடையில் தீ பரவுவதை அவதானித்த கடை உரிமையாளர், அப்பகுதி மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீ விபத்து காரணமாக புடவையகம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கடையில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே குறித்த தீ விபத்து இடம்பெற்றிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். *(ம-7)*

## பாரிய கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தயார்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

*(கொழும்பு)*

நாட்டின் மனித வளத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான பாரிய கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தயாராக உள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று நடைபெற்ற இலங்கையின் 78வது தேசிய சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எமது கல்வித்துறையில் பாரிய பரிமாற்ற யுகத்தை ஆரம்பிக்க வேண்டும். நாம் அதற்குத் தயாராக இருக்கிறோம். நவீன மனிதனை உருவாக்கும் முயற்சிக்கு பழைய பாதகங்களினால் எந்தளவு இடையூறு செய்தாலும் அவை அனைத்திற்கும் எதிராக நவீன அறிவு, நவீன தொழில்நுட்பம், நவீன மனிதனை உருவாக்கத் தேவையான பரிமாற்றத்திற்கான பணியை மேற்கொள்ள நாம் தயார்.

அதற்காக எமது நாட்டு பொதுமக்களின் ஒத்துழைப்புள்ளது என நம்புகிறோம். அதேபோன்று அடுத்த முக்கிய விடயம், மனித வளம் எமக்கு முக்கிய பலமாக உள்ளது என்ற உண்மையான விடயமாகும்.

ஆனால் அந்தப் பலம் நாம் பிரிந்திருப்பதிலா? அல்லது இணைந்திருப்பதிலா தங்கியுள்ளது? எம்மிடமுள்ள பிரதான பலமான மனித வளம் எமது ஒற்றுமையில் மாத்திரமே தங்கியுள்ளது.

நாம் பிரிந்தால் எமது பலம் பலவீனமடையும். நாம் மற்றவர் மீது குரோதம் மற்றும் சந்தேகம் மற்றும் மோதல் ஏற்பட்டால் எமது பிரதான பலம் பலவீனமடையும். இலங்கையென்பது பல்வேறு மதத்தவர்கள் வாழும் நாடு. தமக்கே தனித்துவமான கலாசாரங்களைக் கொண்ட மக்கள் உள்ளனர் என்றார். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 15

என்.சொக்கன்

அமெரிக்காவைப் பாதுகாக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, இவர்கள் அப்படி என்ன செய்கிறார்கள்? வெளிநாடுகளில் குழப்பம் விளைவிக்கிறார்கள், தீவிரவாதிகளுக்குப் பணமாகவும், ஆயுதங்களாகவும் அள்ளிக்கொடுத்து ஆதரவளிக்கிறார்கள், தங்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளாத அரசாங்கங்களைக் கவிழ்க்கிறார்கள் அல்லது அந்த அரசுகளின் தலைவர்களைக் கொல்கிறார்கள், இதெல்லாம் எந்த ஊர் நியாயம்?

இதுமாதிரியான கேள்விகளையெல்லாம் சிஐஏவிடம் வேறு யாரேனும் கேட்டிருந்தால், "சர்த்தான் போய்யா" என்று அலட்சியப்படுத்திவிட்டுப் போயிருப்பார்கள். ஆனால் இந்தமுறை, அமெரிக்கர்களே கேட்கிறார்கள். அவர்களு டைய வரிப்பணத் தில் இயங்குகிற ஓர் அமைப்பு, பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

இந்த விடயத்தில், சிஐஏ வலியுறுத்தக்கூடிய நியாயம் என்று எதுவும் இல்லை. ஆகவே, அவர்கள் பிடிவாதமாக மௌனம் காத்தார்கள். அவர்களுடைய பங்காளிகளான FBIயும் அவ்வாறே.

ஒருவேளை, அவர்கள் வாய் திறந்து பேசியிருந்தாலும், என்ன பெரிதாகச் சொல்லியிருக்கமுடியும்? மிஞ்சிப்போனால், "தேசப் பாதுகாப்புக்காகதான் இதையெல்லாம் செய்தோம்" என்று சொல்வார்கள். அதை இனிமேல் யாரும் நம்பத் தயாராக இல்லை.

வாட்டர்கேட் விவகாரத்தைத் தொடர்ந்து சிஐஏவின் நடவடிக்கைகள் மீது ஒரு பெரிய பூதக் கண்ணாடி விழுந்தது. அங்கே என்ன நடக்கிறது என்று மக்கள் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள், முதன்முறையாக, அதன் செயற்பாடுகளைப் பத்திரிகைகள் பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்தன.

விழுந்த இமேஜை எப்படி மீண்டும் தூக்கி நிறுத்துவது என்று சிஐஏ கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், அங்கிருந்த ஒருவர்மட்டும் கொஞ்சம் வித்தியாசமாகச் சிந்தித்தார்.

அவர் பெயர் வில்லியம் கால்பி (William E Colby). சிஐஏ செயல் பிரிவின் துணைத் தலைவராக இயங்கிக்கொண்டிருந்த கால்பி, "சிஐஏ தன்னைத் தானே சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டிய நேரம் இது" என்றார்.

"இந்த விடயத்தில் அதிகம் உணர்ச்சிவயப்பட்டுப் பிரயோஜனமே இல்லை. ஏதோ தப்பு நடந்துவிட்டது. இல்லாவிட்டால், இத்தனை ஜனங்கள் நமக்கு எதிராகத் திரும்பமாட்டார்கள். ஆகவே, கொஞ்சம் நிதானமாக உட்கார்ந்து யோசிப்போம், நம்மீது தவறு இருந்தால் திருத்திக்கொள்வோம்" என்றார் கால்பி.

வேறொரு சந்தர்ப்பத்தில் அவர் இதைச் சொல்லியிருந்தால், கையில் டிஸ்மிஸ் ஆர்டரைக் கொடுத்து வெளியே அனுப்பியிருப்பார்கள். ஆனால் இப்போது, அவருடைய பேச்சில் கொஞ்சம் நியாயம் இருப்பதாகத் தோன்றியது. ஆகவே, அப்போதைய சிஐஏ இயக்குனர் (James R. Schle singer) கால்பியின் யோசனையை ஏற்றுக்கொண்டார். தன்னுடைய மூத்த அதிகாரிகள் எல்லோரையும் வரவழைத்து, அவர்களிடம் இதுபற்றி விரிவாகப் பேசினார்.



(Italics Start) நண்பர்களே, தேசத்தைக் காப்பாற்றுகிற வேகத்தில், நாம் எல்லோரும் ஏதாவது ஒன்றிரண்டு தவறுகள் செய்திருக்கலாம் அல்லது வேறொருவர் செய்த தப்புகளைப்பற்றி அரசல் புரசலாகக் கேள்விப்பட்டிருக்கலாம்.

இதுவரை, அதையெல்லாம் வெளியே சொல்வது சரியாக இருக்காது என்று மறைத்துவிட்டோம். இப்போது வேறு யாரோ அதைக் கண்டுபிடித்து நம்முடைய மூக்கை உடைத்து விட்டார்கள்.

நாம்தான் மற்றவர்களை உளவு பார்க்கவேண்டும். அவர்கள் நம்மை உளவு பார்த்தால், அது நமக்குத்தான் அசிங்கம். ஆகவே, இந்த விடயத்தில் நாம் ஒரு முடிவெடுக்கவேண்டியது அவசரத் தேவையாகிவிட்டது.

சிஐஏ உளவு அமைப்பு, சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டது. நாம் இப்படித்தான் இயங்க வேண்டும் என்று அரசியல் சட்டம் நமக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது.

ஆனால் உண்மையில், நாம் அதன்படிதான் நடக்கிறோமா? அல்லது செயற்பட்டுக்கொண்டிருக்கிறோமா? "இஷ்டம்போல் எங்கேயெல்லாம், எப்போதெல்லாம் சிஐஏவின் அடிப்படை நோக்கங்களில் நாம் சமரசம் செய்துகொண்டிருக்கிறோம்? சட்டத்தை மீறியிருக்கிறோம்? அத்தனையையும் நாம் கவனித்துப் பதிவு செய்தாகவேண்டும்.

இந்த விடயத்தில் வெட்கப்படுவதற்கோ, பயப்படுவதற்கோ அவசியம் இல்லை. நாம் என்ன தவறு செய்திருக்கிறோம் என்று தெளிவாகத் தெரிந்தால்தான், அதைச் சரி செய்து கொள்வது சாத்தியம். (Italics End)

சிஐஏ இயக்குனரே இப்படிச் சொல்லிவிட்டபிறகு, மற்ற அதிகாரிகளும் மனம் திறக்கத் தொடங்கினார்கள். சிஐஏ செயற்படும் விதத்தில், அது பயன்படுத்திய, பயன்படுத்துகிற வழிமுறைகளில் தங்களுக்குத் தவறு என்று தோன்றியதையெல்லாம் விளக்கமாகப் பட்டியல் போட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

இப்படி சிஐஏ ஊழியர்களிடமிருந்து திரட்டப்பட்ட குற்றச்சாட்டுகளையெல்லாம் கால்பி தொகுத்துப் பார்த்தபோது, அது கிட்டத்தட்ட எழுநூறு பக்கங்களைத் தொட்டிருந்தது. இந்த இரகசிய ஆவணத்துக்கு, "குடும்ப நகைகள்" (Family Jewels) என்று செல்லப்பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இதற்குள், பழைய சிஐஏ இயக்குனர் விலகியிருந்தார். புதிய இயக்குனராக, வில்லியம் கால்பி தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவிக்கு வந்ததும், அவர் சந்தித்த முதல் பிரச்சினை- இந்தக் "குடும்ப நகை"களை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

சிஐஏவின் நடவடிக்கைகளில் இத்தனை பிரச்சினைகள், குறைகள், சட்டமீறல்கள் இருக்கக்கூடும் என்று கால்பியே எதிர்பார்த்திருக்கவில்லை. அந்தப் பட்டியலை நிதானமாக வாசித்து, "படுபாவிகள் இப்படி யெல்லாம், அயோக்கியத்தனம் செய்திருக்கிறார்களே" என்று உச்சுக் கொட்ட மட்டும் தான் அவரால் முடிந்தது.

ஆனால் அப்போதும், அந்தத் தலையணை சைஸ் குற்றப் பத்திரிகையை, அவர் ஒரு நெகட்டிவ் விடயமாகக் கருதவில்லை. அதுவரை தன் இஷ்டம் போல் செயற்பட்டுக்கொண்டிருந்த சிஐஏ, இப்படிக் கொஞ்சம் நிதானமாகத் தன்னைச் சுய பரிசோதனை செய்துகொள்வது நல்ல விடயம்தான் என்று நம்பினார் அவர். இதன்மூலம், சிஐஏவின் செயற்பாடுகள் கொஞ்சமாவது மேம்பட்டால், நல்லதுதானே?

ஆகவே, வில்லியம் கால்பி அந்தக் "குடும்ப நகை"ப் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு, நேராக அமெரிக்க அரசாங்கத்திடம் சென்றார். "ஐயன்மீர், சிஐஏவில் என்னென்ன குறைகள் என்று நாங்களே ஒரு லிஸ்ட் போட்டிருக்கிறோம், இதைப் படித்து, செய்ய வேண்டியதைச் செய்யுங்கள்"

கால்பி கொடுத்த பட்டியலை வாசித்ததும், அமெரிக்க அரசுக்கு ஆச்சரியத்தைவிட, அதிர்ச்சி தான் அதிகமாக இருந்தது.

காரணம், அந்தப் பட்டியலில் இருந்த பெரும்பாலான விடயங்கள் அவர்களுடைய சம்மதத்துடன் அல்லது ஆசிர்வாதத்துடன்தான் நிறைவேற்றப்பட்டிருந்தன. இந்தத் தகவல்களெல்லாம் வெளியே தெரியவந்தால், அவர்களுக்குத்தான் பிரச்சினை.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்கோவளத்தில்...

யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை (04) அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் கங்காதரன் (வயது-51) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் வீட்டில் இருந்தபோது பின் கதவால் உள்நுழைந்த இனந்தெரியாத நபர், மேற்கொண்ட வாள்வெட்டிலேயே அவர் படுகாயமடைந்துள்ளார். (ம-7,60)

## இலங்கையில்...

இந்திய அரசாங்கத்தின் முழுமையான அனுசரணையுடன் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட புனித தாதுக்கள் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்தியாவிற்குச் சொந்தமான விசேட விமானம் மூலம் இந்த புனித தாதுக்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன.

இன்று முதல் எதிர்வரும் பெப்ரவரி 11ஆம் திகதி வரை கொழும்பு கங்காராம விகாரையில்பொதுமக்களுக்கு இந்த புனித தாதுக்களைத் தரிசிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## நீரிழிவு நோயா...

னைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் இளம் யுவதிகள், இளைஞர்கள் மத்தியில் நீரிழிவுத் தாக்கம் அதிகரித்துச் செல்வது காணக் கூடியதாக உள்ளது.

கொழும்பு மாவட்டத்திற்கு அடுத்ததாக யாழ்.மாவட்டத்தில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது.

இது அபாய அறிகுறியாகும். இத்தருணத்தில் இளைய தலைமுறையை காப்பாற்ற வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமும் யாழ். மருத்துவ பீட சமுதாயம் மற்றும் குடும்பநல மருத்துவத்துறையும் நடத்துகின்ற நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வானது 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.மருத்துவ பீடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வுக்கு உலக மருத்துவ நிறுவனம் (IMHO) அனுசரணை வழங்குகின்றது.

இந்த நிகழ்வில் பல்வேறு விதமான நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றது. உணவுத் திருவிழா ஆரோக்கிய உணவு தொடர்பான பட்டிமன்றம், மருத்துவர் கலை நிகழ்வு போன்ற விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடைபெற இருக்கின்றது எனத் தெரிவித்தார். (ம-7)

## கிளிநொச்சி...

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினத்தை கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நேற்று பல்வேறு போராட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக கிளிநொச்சியில் நடைபெற்ற பேரணியின்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸ்ாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் பதற்றமான சூழல் நிலவியது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் நேற்றுக் காலை ஆயிரக் கணக்கானோர் திரண்டு கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அங்கிருந்து கிளிநொச்சி நகரை நோக்கிப் பேரணி சென்றபோது, சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறும் இடத்தைக் கடக்க முயன்றனர்.

இதன்போது பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றதால் இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டு பதற்றம் நிலவியது.

பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்பினர் கறுப்புக் கொடிகளை ஏந்தி இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டங்களில் தமிழ் மக்களுக்கான நிலையான மற்றும் கௌரவமான அரசியல் தீர்வு, தமிழ் நிலங்கள் திட்டமிட்ட முறையில் பௌத்தமயமாக்கப்படுவதை உடனடியாக நிறுத்துதல், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழர் தாயகப் பகுதிகளில் நிலவும் இராணுவக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கிளிநொச்சி உள்ளிட்ட பல பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பில் இலங்கையின் 78ஆவது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து மட்டக்களப்பு காந்தி பூங்கா வரையில் ஊர்வலம் செல்ல ஆயத்தமான நிலையில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு ஊர்வலத்தினை தடுப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் காந்திபூங்காவில் தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறுவதன் காரணமாக அங்கு செல்ல முடியாது என பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர்.

எனினும் தமது போராட்டம் வழமையாக காந்தி பூங்காவில் நிறைவடைவதனால் அங்கு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு காணாமல் போனவர்களின் உறவினர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும் அங்குசெல்வதற்கு அனுமதிக்கமுடியாது என பொலிஸார் தெரிவித்த நிலையில் கல்லடி பாலத்தில் ஆரம்பித்து தனியார் பஸ் நிலையத்தில் போராட்டத்தினை முடிப்பது என பொலிஸாரிடம் தெரிவித்ததையடுத்து போராட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. (ம-7,33,104,316)


லொத்தர் விற்பனையாளர் தேவை

நாவற்குழி சந்தி அருகாமையிலுள்ள கடையிலும் மற்றும் கோப்பாய் வீதி கைதடி சந்தி அருகாமையிலும் லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை. அண்மித்த பிரதேசங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொடர்பு இலக்கம்

077 233 6260

(C-4945)

மஹஜன சம்பத — திகதி 2026.02.04 — சீட்டிழுப்பு இலக்கம் 6095 — U 0 6 0 7 6 8
அத சம்பத — U 0 7 6 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0670

சுப தவசக் — திகதி 2026.02.04 — சீட்டிழுப்பு இலக்கம் 211 — துலாம் 02 18 20 — 3924

தன நிதானய — திகதி 2026.02.04 — சீட்டிழுப்பு இலக்கம் 2125 — T 07 61 66 72 T

மெகா பவர் — திகதி 04/02/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2443 — P 14 36 54 63 80

ஜய — திகதி 2026.02.04 — சீட்டிழுப்பு இலக்கம் 0363 — Y 4 9 0 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4337 — சீட்டிழுப்பு திகதி 04.02.2026 — E 06 08 21 26 — E

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.02.04 — சீட்டிழுப்பு இலக்கம் 1404 — கடகம் 03 07 40 46 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 04.02.2026 — வெற்றி வாரம் 0803 — ஆங்கில எழுத்து U — 6 4 3 2 5 2 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,460,225.60

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3069 — சீட்டிழுப்பு திகதி 2026.02.04 — தினம் புதன்கிழமை — 19 28 68 72 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.95,453,384.80

சனிதா — திகதி 04.02.2026 — வெற்றி வாரம் 5230 — 49 52 69 70 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00

சசிரி — வெற்றி வாரம் 899 — சீட்டிழுப்பு திகதி 04.02.2026 — புதன்கிழமை — வெற்றி இலக்கங்கள் 16 42 44 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,823,360.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4781 — சீட்டிழுப்பு திகதி 04.02.2026 — தினம் புதன்கிழமை — 06 16 20 59 மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,466,570.80

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — E 36 04 06 12 43 — சீட்டிழுப்பு வாரம் 2245 — 04.02.2026 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.626,021,136.60

அத கோடிபதி — புதன்கிழமை — வெற்றி வாரம் 2895 — சீ.இழுப்பு திகதி 2026.02.04 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.85,826,728.00 — 37 60 61 72 I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2025 (2026) O/L

மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு

ஆசிரியர் RS. சந்திரன்

காலம்: பெப்ரவரி 07,08 சனி, ஞாயிற்றுக்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள் :

- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்.
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்.
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

(6741)

றோயல் அக்கடமி

அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 0776649134 நிர்வாகம்



## மணப்பெண் தேவை

01. பளை, இந்து, 1988, அனுசம், Inventory officer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30529)
02. கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03. அல்வாய், இந்து, 1990, ரோகிணி, Charted accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42381)
04. நயினாதீவு, இந்து, 1991, சதயம், Bachelor, Newzealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (28920)
05. நீர்வேலி, இந்து, 1992, அவிட்டம், Bachelor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06. கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07. கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
08. திருநெல்வேலி, இந்து, 1994, ஆயிலியம், Bsc in computer science, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34159)
09. கொக்குவில், இந்து, 1992, அனுசம், Aca[UK], BBA[Australia], Bsc LLM[UK], UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34763)
10. பருத்தித்துறை, இந்து, 1993, ரேவதி, Bachelor of Civil Engineering, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32449)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

(6722)

S.Sharma J.P | 077 189 0367
www.thaalee.com | 077 539 3728



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4947)

076 825 7716 (ஆகாஸ்)


3-ம் ஆண்டு

# நினைவஞ்சலி

மறக்க முடியாத நாள்

கடந்த 05.02.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வம்

## ஜோசேப் அனோஜன் (அனோச்)

[கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன்]

DHL Whare House Supervisor



தோற்றம் 23.07.2003 | மறைவு 05.02.2023

இன்றுடன் மூன்று ஆண்டுகள்
கடந்து விட்டன.
நினைத்துக்கூடப் பார்க்கலடா
அனோச்குட்டி
எத்தனை உறவுகள் அருகினில் இருந்தாலும்
எங்கள் உள்ளம் தேடும்
உறவு நீதானடா - உன்னிடம்
உணர்ந்த அன்பை நாம்
வேறு யாரிடமும் உணர்ந்தது
இல்லையடா? உன்னை நினைக்காத
நாட்களும் இல்லை. உன்னை
நினைத்து கண்ணீர் சிந்தாத நாட்களும்
இல்லையே! எங்கள் உயிரே உன்னை
இழந்துவிட்டோம் என்பதைவிட
உன்னை தவறவிட்டோம் என்பதே
எம்மனதை வாட்டி வதைக்கின்றது.
ஏன் எங்களுக்கு இந்த நிலைமை
கடவுளுக்குக்கூட இரக்கம் வரவில்லையோ
எங்களின் உயிரான உன் உயிரை
இரக்கம் இல்லாமல் பறித்ததற்கு
உன் நினைவுகளைச் சுமந்தபடியே
உயிர்வாழ்கின்றோமடா...

உன் இழப்பால் உள்ளம் உடைந்த-
பாசமிகு அம்மா யோ.கௌசல்யா

582/56, சென்.செபஸ்ரியன் லேன், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (2015)

## வவுனியாவில்...

இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு வவுனியாவில் சமாதானப் புறாக்கள் பறக்க விடப்பட்டதுடன் தேசிய கொடி தாங்கிய பலூன்களும் பறக்க விடப்பட்டன.

நல்லிணக்கத்திற்கான இளைஞர் அணியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகர சபை மைதானத்தில் நேற்று (04) இந்நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக மூவின மாணவர்கள், இளைஞர், யுவதிகள் ஊர்வலமாக மாநகரசபை மைதானத்திற்கு வருகை தந்திருந்ததுடன், மூவின மாணவர்களும் இணைந்து தேசியக் கொடியை ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து சமாதானப் புறாக்கள் பறக்க விடப்பட்டதுடன் தேசியக் கொடி தாங்கிய பலூன்களும் பறக்கவிடப்பட்டன.

(ம-7,250)


அறிமுகப்படுத்தும் LOLC பினான்ஸ் பிரத்தியேக குறுகிய-கால நிலையான வைப்புகள்

4 மாத கால முதிர்வுகளுக்கு
9.26% P.A
9.55% AER

7 மாத கால முதிர்வுகளுக்கு
9.68% P.A
9.87% AER

குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் வழங்கப்படுகிறது.

LOLC FINANCE

அதிக உறுதித்தன்மை, சிறந்த வருமதிகள்.

இலங்கையின் மாபெரும் வங்கிசாரா நிதிச்சேவைகளை வழங்கும் நிறுவனத்திடமிருந்து

RATED A+ | STABLE

லங்கா ரேட்டிங் ஏஜன்ஸி லிமிடெட் இடமிருந்து

(C-417)

*T&C உட்பட்டது

1317


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபன[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org